கம்பரின் காப்பியமரபில் கதையாக்க உத்திமுறைமை: ஓர் ஆய்வியல் நோக்கு

Kambar’s Narrative Strategy Methodology in Copy Tradition: A Research Perspective

மைத்திரி அன்பு
தலைவர்
தமிழ் மாடம் அறக்கட்டளை, செய்யாறு

Mythiri Anbu
Head
Tamil Maadam Trust, Cheyyar

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்க் காப்பியங்களில் கம்பராமாயணம் குறிப்பிடத்தக்கது. இலக்கிய பங்களிப்பிலும், கதையாடல் உத்திமுறையிலும் கம்பர் காப்பிய மரபை தழுவி, தனித்த எடுத்துரைப்பு முறைகளைக் கையாண்டுள்ளார். குறிப்பாக கிளைக் கதைகளை கதாப்பாத்திரங்களின் கூற்றுகளாகவும், புறநிலையில் நிகழும் நிகழ்வுகளை கதை கேட்போரின் தன்மைக்கு ஏற்பவும் அமைத்துள்ளார். அதனால் காலம் கடந்தும் கம்பராமாயணம் மீட்டுருவாக்கப் புனைவாகவும், நாடகப் பாங்கிற்கு ஏற்றதாகவும் அமைந்திருப்பதை இவ்வாய்வு கட்டுரை ஆராய்கிறது.

குறிச் சொற்கள்:
கம்பர், கம்பராமாயணம், கதையாக்கம், உத்தி, காப்பிய மரபு, கதையாடல், கிளைக்கதை, துணைக்கதை, தனிக்கதை

Abstract

Kambaramayanam is notable among Tamil Kappiyams. In his literary contribution and narrative technique, Kambar has adopted the copy tradition and employed unique modes of presentation. In particular, he has set the sub-stories as the statements of the characters and the events that happen objectively according to the nature of the story listeners. Therefore, this review examines how the Kambaramayana has become a re-enactment fiction and suitable for the theatrical genre over time.

Keywords:
Kambar, Kambaramayanam, Story Telling, Strategy, Documentary Tradition, Storytelling, Subplot, Discourse.

Citation

Anbu, Mythiri. “Kambar’s Narrative Strategy System in Copy Tradition: A Research Perspective.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 54–59.

முன்னுரை

இலக்கியத்தின் பாடுபொருள் தன்மைக்கேற்பவும், வகைபாட்டிற்கேற்பவும் அதன் உத்தி முறைமைகள் மாறுபட்டும், புதுவிதத்தில் உருவாக்கம் பெற்றும் அமைவவதுண்டு. அதனடிப்படையில் காப்பியமரபு நம் இலக்கிய வகைமைக்குள் அதற்கெனத் தனித்த உத்திமுறைமைகளைப் பெற்றிருக்கின்றது. அதனினும் கவிச்சக்கரவத்தி கம்பர் இயற்றிய காப்பியம் தனித்துவம் வாய்ந்தது. அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரை கம்பர் இயற்றிய காப்பிய மரபுக்குள் பயின்றுவந்துள்ள கதையாக்க (உத்தி) மரபுகளை விளக்கும் வகையில் அமைக்கப்படுகிறது.

காப்பியமும் கதையாக்கமும்

காப்பிய இலக்கியம் மற்ற இலக்கியங்களைப் போல, வெறும் கதையாகி, கதை கூறும் நிலைக்குரியப் பண்புகளோடு அமைந்துவிடுவதல்ல. காப்புச் செயல்பாடுகள், காப்பியப் படைப்பாளனின் மொழியாளுகைகள், கதாப்பாத்திரங்களின் கூற்றுகள், பல்வேறு காட்சி மாற்றங்கள், செயலோட்டத்தின் கீழான ஏற்ற-இறக்கங்கள் என அனைத்தும், ஒன்றாகி முத்தமிழில், தனித்தமிழாய் அமைந்திருக்கும் நாடகத் தன்மையை ஒத்து அமைந்திருப்பதேக் காப்பிய இலக்கியமாக அங்கிகரிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் சங்க அகமரபுகள் தொடங்கி தற்கால இசங்கள் வரை, நாடகப்பாங்குத் தனிஇடம் பிடித்த ஒன்றாகிறது. இதில் காப்பியக்காலம் முதன்மையானது. கம்பனின் இராமவதாரமும், அதனூடான கதைக்கூறும் நாடகப்பண்பும், கதையாக்க வெளியீடுகளும் இம்முதன்மையின் முன்னிலைகள். அதன்கிழ் கம்பரின் காப்பியக் கதையாக்க வெளிப்பாடுகளை ஆராய்கையில், அவை கதைக்கூறும் உத்திமுறைமைகள், நாடக அமைப்புக்குள்ளான உத்திமுறைமைகள் என இருவகைப் படுத்தப்படுகின்றன.

காப்பியத்தின் கதைக்கூறல்கள்

பொதுவாகக் காப்பிய இலக்கியத்தின் கதைக்கூறல் உத்திமுறைமைகள் கதைத் தொடக்கத்திற்கு முன் பாயிரம், காப்பியப் பதிகப்பகுப்புகள், காப்பியக் கதையாசிரியரின் வெளிப்பாடுகள், கதைக்கான காலஉணர்வு, காப்பியப் பொருண்மையின் புலப்படல்கள் ஆகியன "அமைப்புமுறை உத்திகள்" என்றும்; காப்பியத்தின் மூலம் கிளைக்கதைகள், முன் நிகவின் பின்கூறல், பின்நிகவின் முன் உணர்த்தல், மீவியல்புகள் ஆகியன "கதைக்கூறு உத்திகள்" என்றும் அழைக்கப்படுகின்றன. இவையேத் தொடக்கத்தில் காப்பியக்கதை நிகழ்வுகளின் கீழ்,

1. *தலைவனின் வருகையும் புறப்பாடும்* (Arrival, Departure)
2. *தலைவனின் காலை எழுச்சியும், மாலை ஓய்வெடுப்பும்* (Hero's Rising in the morning and Resting at Night).
3. *ஆடை அணிதல். இது, போர்வீரர்கள் கவசம் முதலியவற்றை அணிதல்* (Dreesing & the theme of Dress)*; பெண்கள் ஆடவராக மாறுவேடம் பூணல்* (Disquise & Women in Men's Clothing) *என இருவேறு வகையில் அமைகிறது*[1]
4. *விருந்தோம்பல் மற்றும் மகிழ்வலித்தல். இதில் கலை நிகழ்ச்சிகள் முதலான மகிழ்வித்தலும் இடம் பெறுகின்றன.*
5. *கடற்செலவு (அ) கப்பற்பயணம்* (Sailing & Ship; Sea Voyage).

என்னும் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதுவரைக் கண்ட வகைமை, காப்பியப் பண்புக்கு ஒருவகையில் ஒத்ததுதான். ஆனால் இதிலிருந்தும், மொழியடிப்படையில் வகைப்படுதல்[3]

தனிநிலையாக அமைந்திருக்கிறது. இதனை "மொழிக்கூற்றுமுறை உத்தி" என்று அழைக்கின்றனர். அதன்கீழ்,

"கேட்போரை விளிக்கும் முன்னிலையில் அமையும் மொழிப்பாங்கு" (Poet Addressing the Public) *அதாவது, "நான் கூறுவேன் கேளீர், நீங்கள் இனிக் காண்பீர்கள், நான் முன்னமேக் கூறினேன்" ஆகிய முன்னிலைகளை எண்ணங்களாகக் கதைக்குள் கையாளுதல், கம்பரின் காப்பிய வெளியீடுகளில் இவ்வுத்தி பெரும்பாலும் ஆசிரியர் கூற்றாகவே இடம் பெற்றுள்ளது. "புதிது புதிதாக கதைச் செய்திகளை சேர்த்தல் (அ) பின்னுதல்" என்னும் உத்தி, கம்பரின் காப்பியம் நமக்கு முழுமையாகக் கிடைக்கப் பெற்றமையால், மிகக்குறைவாக இடம் பெறுகிறது. இருப்பினும் முதலில் வந்த செய்தி, மீண்டும் வரும் சூழலில் அவை சற்று மாற்றியுரைக்கப்படுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, "அனுமன் தனித்து சீதையைப் பற்றி கூறும் செய்தியையும் (45.,3-18), இராமன் அனுமனை தூது அனுப்பி சீதை சிறைப்பட்டிருக்கும் சூழலைக் கண்டு வந்துக் சொல்லச்சொன்ன பொழுது சீதையைப் பற்றி அனுமன் கூறும் செய்தியையும் (5287.,89) குறிப்பிடலாம். அதேபோல் இரணியன் கதை கூடுதல் செய்தியாக அமைந்திருக்கிறது.*

"சுவாய்ப்படுகளைப் பயன்படுத்துதல்" என்னும் உத்த்தியாகும். இது நிலைத்த அடைமொழிகளை (Fixed Epithsts) *பயன்படுத்துதல், தொடர்ப்பயிற்சி மொழிகளைக் கையாளுதல் என, இரண்டு வகைப்படும். பொதுவாக இவ்வாய்ப்பாட்டு நிலைக்கு இலக்கியத்தில் நேர்மாறான பாங்குக் காணப்படுவது வழக்கம். ஒரு பொருள் பலமுறை பலவிதமான தன்மைகளில் கூறப்படுவதால் இது நிகழ்கிறது. இதனை நிகழ்வு, செயல், வளம் போன்ற இடங்களில் கம்பர் கையாண்டுள்ளார். போர்க்களச் செய்திகளோ, உருவருணனைகளோ மீண்டும் மீண்டும் வரும்பொழுது வகைமைத் தோன்ற வெவ்வேறு விதமாகக் கூறப்படும் தன்மையில் கம்பருக்கு இது பொருந்துகிறது.*

"காப்பிய இலக்கியத்தின் தொடக்கமும் முடிவும்" என்னும் உத்தி. இதில் ஒரு மறைபொருள் உருவாக்கப்பட்டு, வாசகர்கள் விரும்பும் வண்ணம் விறுவிறுப்பு ஏற்பட, படைப்பின் சலிப்புத் தன்மையை குறைத்து, நடையியலில் நயம்மிளிர கதையமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மொழிக் கூற்றுமுறை உத்தியில், மீண்டுவருதல் (Repefitions) *என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்து விடுகிறது. இந்த மீண்டுவரலில் பெரும்பாலும் உவமைகள் இடம் பெறுகிறது. இது ஒருவகை காப்பியமரபாகும். "கம்பராமாயணத்தில் கூட கம்பர் இராமனை - கதிரவன் என்றும்; சீதையை - அமுழ்து என்றும் மீண்டும் மீண்டும் உவமித்துச் செல்கிறார்.*

பொதுவாக இம்மீண்டுவரல் உவமையின் கீழ்க் காப்பிய முரண் (Epicantithesis) *தோன்றும். இது, எதிர்மறை உவமை* (Negatire Comparison), *ஒப்பியல் உவமை* (Dissi & Milar Comparison) *என இருவகைப்படும். இதில், முதலில் ஒரு உவமைக் கூறப்பட்டு, பிறகு அதற்கு மறுப்பான பொருளாளுமைகள் வெளிப்படுவது ஒருநிலை. எடுத்துக்காட்டாக, கம்பராமாயணத்தில் இராமன் பல இடங்களில் சீதையின் உறுப்புகளுக்கு ஒப்புக்கூறும் பொழுது ஏற்கும் உவமைகளை, பின் அவனே மறுத்துக் கூறும் நிலைகளைக் நினைவுக் கூறலாம்.*

கம்பரின் காப்பியக் கதையாடல்கள்

பொதுவாக நூலின் மூலம், இதுவெனச் சுட்டியுரைப்பது காப்பியத்தின் பழமரபுத்தி. இதனை,

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர்தம் உளும் முந்திய

நாவினார் உரையின்படி நாந்தமிழ்ப்
***பாவினால் இது உணர்த்திய பண்புஅரோ*[4]**

கம்பராமாயண நூல் வரலாறு பகுதி உணர்த்துகிறது. அதோடு கம்பராமாயணத்தில் கதைச்சுருக்கம் கிடையாது. இது அல்லாது கம்பர் நூற்பெயர் கூறிப் பாடுபொருளை உடன் உணர்த்தும் உத்தியையும்; பாயிரம் தொடங்க இறைவணக்கத்தில் உலகம் என்னும் மங்கலச்சொல்லையும் அமைத்துள்ளார். காப்பியத்தின் தொடக்கம் கதையின் முழு நிலையில் அதன் கருதுபொருளையும் கொண்டதாக அமைவது வழக்கம். ஆனால், கம்பர் பாயிரத்தைத் தொடர்ந்து ஆற்றுப்படலமும், மகப்பேறு இன்மையால் வருந்தும் தசரதனின் செயலையும் கதைத் தொடக்கமாகக் கொண்டமைந்துள்ளார். இந்த இருவிதமான காட்சிகளையும் கம்பர் காப்பியக் கோட்பாட்டின் பொதுமைக்கும், தன்னுடனான சிந்தனைக்கும் ஒத்து, அணுக புதுமைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கதைத் தொடத்தைப்போல, கம்பர் படலத் தொடக்கங்களின் வாயிலாகவும் கதையை நகர்த்திச் செல்கிறார். மேலும் அதில் ஒரு படலத்தின் முடிவு, அடுத்த படலத்தின் தொடக்கமாக அந்தாதித் தன்மையில் புனைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கம்பர் காப்பிய வெளிப்பாடுகளில், தன்னை ஆங்காங்கே வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். சில இடங்களில் காப்பிய ஆசிரியராக மட்டுமில்லாமல்,

வாங்க அரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீம்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை அன்பு எனும் நறவம் மாத்தி
***முங்கையான் பேசுலுற்றான் என்ன யான் மொழியல் உற்றேன்*[5]**

என்றவாறு சாதாரண வாசகனின் மனநிலையிலும் கம்பர் கருத்தியுள்ளார். இது தனி ஆய்வுக் குரிய பகுதி. இதில், கவிஞரின் உணர்வு வெளிப்பாடுகள் (307); கதைக்கூற்று (311); காப்பிய நிறைவேற்றம் (502); பொருள் மாற்று (720); நுதலிப்புகுலுத்தி (3319); தொடர்நிலைப் பாங்கு (3462); கதாப்பாத்திரங்களின் நிலைபேறு (8027); தொகுத்துரைப்பு (9530) போன்ற ஆசிரியனுக்கான உணர்வுத்திகளும் அடங்குகின்றன.

கம்பரின் - காப்பியக் கிளைக்கதை

காப்பியத்தின் கதைக்கு இடையில், கதைக்குள் கதையாக அமைவது கிளைக்கதை. காப்பியத்தின் தொடக்கம் முதல், இறுதி வரை செல்லும் முதல் (அ) மூலக்கதையை அடிப்படையாகக் கொண்டு, காப்பியப் பாத்திரங்களின் கதையாகவும், துணைப்பாத்திரங்களின் கதையாகவும் இக்கிளைகதைகள் அமைவதுண்டு. இதில் முதலில் வரும் கதை துணைக்கதை என்றும்; துணையாக பின்னால் வரும் கிளைக்கதைகள் தனிக்கதைகள் என்றும் அழைக்கப்படுகின்றன6 பொதுவாகக் கதைநிகழ்வு என்பது ஒரு பாத்திரத்தின் கதையை அப்பாத்திரமே கூறுவதாகவும், அல்லது குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் வரலாற்றை, வேறொருப் பாத்திரம் பல்வேறு கிளை நிகழ்வுகளாகக் கூறுவதாகவும் அமையும். இதில் கிளைக்கதை என்பது பல கதைகளைக் காப்பியத்திற்குள் சொல்லுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக ஒரு காப்பியத்தின் எல்லா அம்சங்களோடும் பின்னிப்பிணைந்து, காப்பிய நிறைவேற்றத்துக்காகவும், கருதுகோளுக்காகவும் காப்பியப் பண்புகளோடு ஒத்து துணைபோகும் பாங்குடையதாக அமைவதாகிறது. இதில்தான், காப்பியத் தலைவனின் சிறப்பியல்புகள், இறைமை குணங்கள், துணைப் பாத்திரங்களின் வருணனைகள் போன்ற உயர்வு நவிர்ச்சிகள் வெளிப்படுகின்றன. இது படைப்பிலக்கியத்தின்

ஒருவித எதிர்பார்ப்பு. இம்மாதிரியான எதிர்ப்பார்ப்பு இராமாயணக் கதைக்கும் பொருந்தும் வண்ணம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் தான், இராமாயணத்தில் இடம்பெறும் தாடகையின் கொலைசெயல், அகலிகையின் சாபவிமோசனம், விராதன் கவந்தன் ஆகியோரின் கொலைக்களங்கள், இலக்குவனின் சிறப்பியல்புகள், அனுமனின் குரங்கினச் சிறப்புகள், அங்கதன் சிறப்புகள், துமிரனின் அழிவு, இலங்காதேவியின் வெற்றி7 ஆகியன இராமனுடன் இணைந்துக் காப்பியக்கிளைகளாக விரிகின்றன.

காப்பியக் கிளைக்கதைகள் உயர்திணையில் மட்டுமல்லாமல் அஃறிணைப் பொருட்களுடனும் கதையை நகர்த்துவதைக் காப்பிய மரபில் காணமுடிகிறது. கம்பராமாயணத்தில் வரும் மாமரத்தின் வரலாறு (3857-3875) வில்லின் வரலாறு (1287-1293) மற்றும் கதை (3676-3679); ஆகியவற்றை அதற்கான எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். அதேபோல, தசரதன் தான், தன் சாப வரலாற்றைக் கோசலைக்குக் கூறும் கிளைக்கதையானது (1677-1692), கம்பராமாயணத்தின் துணைக் கதையைப் போலப் போற்றத்தக்கதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்துதான், முன்நிகழ்வு பின்உரைத்தலும், பின்நிகழ்வு முன்உணர்த்தப்படுதலும் கம்பராமாயணத்தில் தொடங்குகிறது. இதில் இராமன் பிரிவான், அதனால் தசரதன் உயிர் பிரியும் என்னும் பின்நிகழ்வு முன்னாதாகக் கூறப்படுதலும்; காப்பியத்தின் திடீர் திருப்பமான, கூனி - கைகேயி பாத்திரங்களின் மீதான வெறுப்பும் சலிப்பும் களையப்பட, முன்வினையின் பின்விளைவை வலியுறுத்துவதும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது விதியின் (தர்கத்தின்) புலப்பாடாகக் காப்பியத்தில் விளக்கப்படும் விளக்கமாக அமைந்திருக்கிறது. இதோடு, இரணியனின் கதை (6316-6320), பரசுராமனுக்கான கதைகள் (1627-1629); (5195-1597); 5203.; இலட்சுமனன், அனுமன் உள்ளிட்ட கதைகள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆய்வுரை

- *கம்பரின் காப்பிய புலப்பாடுகள், புறநிலைக் கோட்பாடுகளைத் தழுவியதாக இல்லாமல், காப்பிய இலக்கியக் கொள்கைகளை மையமிட்டதாக இருப்பது கவனிக்கத்தக்கதாகிறது. இராமாயணத்தின் கதைச்சூழலில் வெறுமனே உத்தி முறைமைகளை மட்டும் காண வேண்டியதில்லை. அதினூடே, தன்னையும் மைய நிறுத்தி - மொழித்துரைக்கும் கம்பரையும் காணலாம்.*
- *இராமாயணக் காப்பியத்தின் கிளைக்கதைகள் பெரும்பான்மையும் கம்பரின் கருத்தியலாக (குரலாக) இல்லாமல், கதாப்பாத்திரங்களின் கூற்றுகளாக அமைந்திருப்பது சிறப்பு. கம்பரின் காப்பிய - புறநிலையில் இடம்பெற்ற, முன்-பின் நிகழ்வுகள், காப்பிய நிலையிலிருந்தும்; கதை கேட்போரின் நிலையிலிருந்தும் அணுக வாய்புடையதாக அமைந்திருக்கிறது.*
- *காப்பிய-கிளைகதைகள் தற்கால தொடர் கதைக்களுக்கான வாயில்களை ஏராளமாக திறக்கின்றன. அதிலிருந்து ஒரு புதிய முன்கதைக் கட்டமைய வாய்ப்புகள் உண்டு. இன்னும் இக்காப்பிய வெளிப்பாடுகளில் இயற்கையின் மீட்டுருக்களும், நாடகப் பாங்கின் கீழான செயல்பாடுகளும், போக்கும், பல்வேறுபட்ட காட்சி மாற்றங்களையும், பாத்திர உரையாடல்களையும் நிகழ்த்தி கம்பரின் காப்பிய மரபை நீட்டிக்கின்றன.*

அடிக்குறிப்புகள்

1. *ரோமபதம், தசரதனை வரவேற்றல் (237-240): கலைக்கோட்டு முனிவர் அயோதிக்கு வருகை தரல் (247-248); (2) இராமன் சீதையைக் கண்டு காதலுற்று, மாலை நேரங்களில்*

அவளது இரவுப்பொழுதைப் பற்றியும், விடியலில் அவள் விழுப்புறும் காட்சியையும் நினைவுறல் (617-637); (3) சீதை ஆடை அணிகலன்களில் அழகுறல்; இராகவன் தன்னுடல் அழகை ஆடைகளால் மறைப்பது (கடிமணப்படலம்.1207-1221); இராவணன் போர்களம் தேர்ஏறும் படலம்.9645-9666); இராமன் போர்களம் தேர்ஏறும் படலம்.9677-9680); பூணுதல் மற்றும் இராவணன் வேடம் மாறுதல் இராவணன் சூழ்ச்சிப்படலம். 3338-3342) - சக்திதாசன் சுப்பிரமணியன்.(தொ.ஆ)., கம்பன் கவித்திரட்டு, நித்தியானந்தா ஜோதி நிலையம்., சென்னை.28 (1981).

2. *எதிர் கொடு ஏத்தினார் இன்இசை பாடினார்*
   வெதிர் கொள் கோலினார் ஆடினர் வீரனை
   கதிர் தொனி தாமரைக் கண்ணணை கண்ணினால்
   மதுர வாதி அழுது, என மாந்துவர் - கடேரும் இராமன்., கங்கைக்கொண்ட தபோதனரை எதிர்கொண்டு விருந்தளித்தல் (மேலது., 1937).
3. Feasts., Technique of composition & Language., Pp.215 & 253, Multilingual Matters Publish, Chennai-28. (2015).
4. *கம்பராமாயணம்., நூல் வரைந்த., மேலது., பாயிரம்.10.*
5. *மேலது., நாட்டுப்படலம்.32.*
6. *ச.வே.சுப்பிரமணியம்., சிலம்பும் சிந்தாமணியும்., ப.227., தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, (1979).*
7. *ச.வே.சுப்பிரமணியம்., கம்பன் இலக்கிய உத்திகள்., பக்.394-398., மெய்யம்மை பதிப்பகம், சென்னை-14 (1982).*